TAM209E2



894.301
NAY
PDY10091

# அம்மா எங்கே?


கதை நந்தினி நாயர்    படங்கள் ஸ்ரீவித்யா நடராஜன்

894.301
NAY

Tulika

# அம்மா எங்கே?

கதை நந்தினி நாயர் படங்கள் ஸ்ரீவித்யா நடராஜன்
தமிழில் மலர்விழி



AZIM PREMJI FOUNDATION
ACC. No. PUD10091
LIBRARY
PUDUCHERRY

கிரண் அம்மாவை தேடிக் கொண்டிருந்தான்.

அம்மா எங்கே காணாமல்
போய்விட்டாள்?





சமையல் அறையில் பார்த்தான்.

அம்மா அங்கு இல்லை.

மாடி முகப்பில் பார்த்தான்.

அம்மா அங்கு இல்லை.



கட்டிலில் புத்தகத்துடன்
சுருண்டு படுத்திருந்தாளா?

கட்டில் காலியாக இருந்தது.





ஒரு வேளை கட்டிலுக்கு அடியில்?

இல்லை.

அங்கு இல்லை.

கணினிக்கு முன்?




கணினியை யாரும்
போட்டுவைக்கவில்லையே.

கிரணின் அம்மா எங்கே?






அப்போது அவள் சப்பலைப்
பார்த்தான்.
பிரிஜ்-க்கு முன்னாள்.



"அங்க இருக்கியா அம்மா?"
கிரண் கேட்டான்.
பதில் இல்லை.

“நா சொல்றது கேக்குதா?”
சத்தமாக கிரண் கேட்டான்.

பதில் இல்லை.





“உள்ள குளிரலையா?
என்ன பண்ணிட்டு
இருக்க?”

இன்னும் பதில்
இல்லை.





கிரண் சற்று
யோசித்தான்.
"எல்லா பாலையும்
குடிச்சிட்டு இருக்கியா?"

“எல்லா பர்பியையும் சாப்டிட்டு இருக்கியா?”



வாய் நிறைந்திருக்கு,
அவளால் பேச முடியவில்லை,
என்று கிரண் யோசித்தான்.

“எல்லா ஜாமையும் முடிச்சுறாத,” என்றான்.



அப்போதும் பதில் வராமல்,
கிரண் சொன்னான்,

“சீக்கிரமா வெளிய வா,
அம்மா!”



“ஓ! இங்க இருக்கியா?” என்றான் கிரண்.
“நீ பிரிஜுக்குள்ள இருந்தன்னு
நெனச்சே.”

“நெஜமாவா?”
அம்மா கேட்டாள்.





கிரண் சப்பலைக் காட்டினான்.

அம்மா சிரித்தாள்.

“உள்ள ரொம்ப குளிரா
இருந்திருக்கும், உன்கிட்ட
சுவெட்டர் கூட இல்ல!”
என்றான் கிரன்.

அம்மா உரக்க சிரித்து,
அவனைக் கட்டிப் பிடித்தாள்.



Tulika

அங்க இருக்கியா அம்மா?

உள்ள இருக்கியா அம்மா?

கிரண் அம்மாவை எல்லா இடத்திலும் தேடுகிறான் – சமையல் அறையில், மாடி முகப்பில். . . அவள் எங்கே இருக்க முடியும்?

**நந்தினி நாயரின்** முதல் புத்தகம் *பிரணவின் படம்.* இதை தூலிகா 2005-இல் வெளியிட்டது. நகைச்சுவை மிக்க *நீ என்ன பார்த்தாய்?* மற்றும் பிரபலமான *என்ன செய்யலாம்?* புத்தகங்களுக்கு பின், தூலிகா மூலம் இவருடைய சமீபத்திய படைப்பு *அம்மா எங்கே?* இவர் கதைகள் பல வெளியீடுகளில் இடம் பெறுகின்றன. எழுதாத நேரத்தில், தன் மகன் பிரணவுக்கு வேடிக்கை காட்டுகிறார்.

**ஸ்ரீவித்யா நடராஜன்** ஹைதராபாத் பல்கலைகழகத்திடம் ஆங்கிலத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். இவர் பரதநாட்டியம் ஆடுபவர், எழுத்தாளர், புத்தகங்களுக்கு படங்கள் வரைபவர். கனடாவில் வசித்து வருகிறார். இவர் தூலிகாவுக்காக படம் வரைந்த ஏழாவது புத்தகம் இது.



ISBN 81-8146-918-6

9788181469182

TAMIL
Age 3+ / Rs 95